மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், கேள்வி நேரத்தில் இதுமாதிரி எல்லாம் பிரச்சினைகளைப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் இதையெல்லாம் கேள்வி நேரத்தில் பேசாதீர்கள். உட்காருங்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைமையைப் புகழ்ந்தேன், வேறு ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடகங்களில்** என்று சொன்ன வார்த்தையை 'கூறிவிட்டு' என்று மாற்றிக்கொள்ளும்படி தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: பெரம்பலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர், வேப்பந்தட்டை, வேப்பூர், வாலிகண்டபுரம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் சார்-பதிவாளர் அலுவலங்கள் இயங்கி வருகின்றன. எங்களது மாவட்டத்திற்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை வணிக வரித் துறை அமைச்சர் அமைத்துத் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் நன்றி சொல்லிவிட்டார். உட்காருங்கள். வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

போக்குவரத்துப் பணிமனைக்குக் கட்டடம்

***25350—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் உள்ள போக்குவரத்துப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2018 ஜூன் 1]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவொற்றியூர் பணிமனையில் பணிமனைக்குத் தேவையான அனைத்து கட்டட வசதிகளும் உள்ளதால் தற்போது திருவொற்றியூர் பணிமனைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சொல்லுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறை-1, குழித்துறை-2, மார்த்தாண்டம் பணிமனைகளின் தரைத் தளம் மிகவும் உடைந்த சூழ்நிலையில் இருக்கின்றன. கிட்டத்தட்ட எல்லா பணிமனைகளுக்கும்* concrete *தளம் அல்லது* paver block *தளம் அமைக்க வேண்டுமென்றால் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். துறைரீதியாக அந்தப் பணிகளை எடுத்துக்கொண்டு செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பணிமனைகளுக்குத் தரைத் தளம் அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். போக்குவரத்துக் கழகத்தில் இருக்கக்கூடிய பணிமனைகளை மேம்படுத்துவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் நிதியினை வழங்க வேண்டும். போக்குவரத்துக் கழகத்தில் நிதி குறைவாக இருக்கின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை வழங்கினால், அவர் கேட்கின்ற அந்தப் பணிகளை முடித்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

சமுதாயக் கூடம்

***9836—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாநகராட்சி, கிருஷ்ணாபாளையம் பகுதி, 13-வது வட்டத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து மக்களுக்கு இராமர், முருகன்; இஸ்லாமிய மக்களுக்கு மாஷா அல்லா; கிறிஸ்தவ மக்களுக்கு ஏசுநாதர்; ஆனால், ஏழு கோடி தமிழ்நாட்டு மக்களுக்கும் குலதெய்வமான தாயின் திருவடி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், பண்பாட்டுக்குரிய துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி என்னுடைய பதிலைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஈரோடு மாநகராட்சி, கிருஷ்ணாபாளையம் பகுதி, 13-வது வட்டத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த உறுப்பினரின் கோரிக்கை மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள். கேள்வி கேட்க வேண்டும். நீங்கள் படிக்கக் கூடாது.*